**செய்தி வெளியீடு எண் : 1370** **நாள் : 05.09.2024**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், இன்று மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

---

மதுரையில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் கட்டட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, இன்று (05.09.2024) மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், பொதுப்பணித்துறை ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைப் பார்வையிட்டு, இந்நூலகம் முறையாக பராமரிக்கப்படுகிறதா? என்பதையும், வாசகர்களிடம் போதுமான வசதிகள் உள்ளதா? என்பதையும், அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள். இந்நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் எண்ணிக்கை, 11 இலட்சத்தை தாண்டியதை முன்னிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டம் நடைப்பெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட புதிய கட்டடக் கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி விரைவில் பெற்று பணிகளைத் தொடங்கவும், நடைப்பெற்று வரும் அறிவிப்பு பணிகளை துரிதப்படுத்தி முடிக்க வேண்டுமென அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

கண்காணிப்புப் பொறியாளர்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ள மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் மற்றும் இதர கட்டடங்களை அவ்வபோது களஆய்வு செய்து, பராமரிப்புப் பணிகள் குறித்த விவரங்களைப் பதிவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தினார்.

மருத்துவமனைகள் மற்றும் பொது கட்டடங்களில் பெரும்பாலான மின்தூக்கிகள்(Lift) முறையான பராமரிப்பில்லாமல் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, அதனை அவ்வப்போது கண்காணித்து, பழுது நீக்கிடுமாறு கேட்டுக் கொண்டார்.

தரக்கட்டுப்பாட்டு பொறியாளர்கள், அனைத்து கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்து, தரக்கட்டுப்பாடு கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைத்து அனுமதி பெறவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

முக்கிய திட்டப் பணிகளின்(Iconic Project) கட்டுமானப் பணிகளில் கவனம் செலுத்தவும், அறிவிக்கப்பட்ட பெரிய திட்டப் பணிகளுக்கு, நிர்வாக ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கும்போது, திட்ட உருவாக்க நிதியை பயன்படுத்தி, மண் பரிசோதனை மற்றும் இதர பணிதள ஆய்வுகள் மேற்கொண்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டுமென தெரிவித்தார்.

விரிவான மதிப்பீடு தயாரிக்கும்போது, மண்பரிசோதனை மேற்கொண்டு, உரிய அடித்தளம் வடிவமைத்தல், பயன்பாட்டு துறையிடம் உரிய ஆலோசனை மேற்கொண்டு, தேவைப்படும் வசதிகள் குறித்து, கருத்துரு பெற்று பரிசீலிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மதிப்பீட்டில், தொழிலாளர் நலநிதி, எதிர்பாரா செலவு நிதி போன்ற L.S. இனங்களை தவிர, பிற அனைத்து இனங்களுக்கும் விரிவான மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்றும், இதனை முறையாக பின்பற்றவதன் மூலம் கூடுதல் நிதிக்காக திருத்திய நிர்வாக ஒப்புதல்(RAS) பெறுவதை தவிர்க்கலாம் என்று அறிவுரை வழங்கினார்.

கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான வாட்டர் ப்ரூப், எம்–சாண்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்குத் தேவையான கெமிக்கல் கலவை(போஸ்ராக் நிறுவனத்தின் செபக்ஸ் 113 கலவை) போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும், கட்டடப் பராமரிப்புப் பணிகளின்போது, தற்போது சந்தையில் நடைமுறையில் உள்ள நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், மின்பொறியாளர்கள்

அவ்வப்போது, மின் அமைப்புகளை ஆய்வுசெய்து, மின் கசிவு ஏற்படா வண்ணம் பராமரிக்கவும், கட்டடக் கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்குமுன், சுற்றுச்சூழல் அனுமதி, கட்டட வரைப்பட அனுமதி போன்றவற்றை பெறவேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

கட்டுமானப் பணிகளின்போது, பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாத இடத்தில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, விபத்துகள் ஏற்படாத வகையில், கட்டுமானத் தொழிலாளர்கள் பாதுகாப்பு மிகவும் அவசியமாகிறது. கட்டுமானப் பணியில் ஒவ்வொரு நிலையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுகிறதா? என்பதைப் பொறியாளர்கள் கண்காணிக்க வேண்டும். பாதுகாப்பு வலை, பாதுகாப்பு பெல்ட், தலைக் கவசம், பாதுகாப்பு காலணி ஆகியவற்றை பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், முதலுதவிப் பெட்டி, தீ அணைப்புக் கருவிகள் எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கிரைன் லிப்ட் பயன்படுத்தும்போது, துல்லியமான தகவல் பரிமாற்றம் மிகவும் அவசியம். பாதுகாப்பற்ற குறுக்கு வழிகளைப் பின்பற்றக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்கள்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனை கட்டுமானப் பணிகள் மற்றும் மதுரை திருமலை நாயக்கர் மஹால், மதுரை காந்தி அருங்காட்சியகம் போன்ற பாரம்பரியக் கட்டடங்கள் புனரமைக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொன்றாக ஆய்வு செய்த அமைச்சர், இப்பணிகளில் காலதாமதமின்றி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனை கட்டுமானப் பணிகளின்போது, ஏற்பட்ட விபத்துக் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, கேட்டறிந்து இத்தகைய விபத்துகள் இனி ஏற்படாத வகையில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா, இ.ஆ.ப.,

பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு.செல்வராஜ், சிறப்பு பணி அலுவலர் திரு.இரா.விஸ்வநாத், தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி.எம்.இளவெண்மால் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu